# காலாண்டு பொதுத்தேர்வு - 2018

## பத்தாம் வகுப்பு - அறிவியல்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ | பீட்டா | 1 |
| 2 | ஈ | BCG | 1 |
| 3 | ஆ | புல் | 1 |
| 4 | ஆ | தைமஸ் | 1 |
| 5 | | இனப்பெருக்க எபிதீலியச் செல்கள் | 1 |
| 6 | ஆ | அக்ரோமெகாலி | 1 |
| 7 | ஆ | ஐசோடோன்கள் | 1 |
| 8 | அ | ஐசோடோப்புகள் - $_1H^1$ , $_1H^2$ | 1 |
| | ஆ | ஐசோடோன்கள் - $_6C^{13}$, $_7N^{14}$ | 1 |
| 9 | ஆ | சிதைவுறுதல் வினை | 1 |
| 10 | இ | 3 | 1 |
| 11 | அ | $9.467 \times 10^{15}$ m | 1 |
| 12 | | புலி | 1 |
| 13 | ஆ | திரவஹீலியம் | 1 |
| 14 | இ | வோல்டாமீட்டர் | 1 |
| 15 | ஆ | அம்மோனியா | 1 |
| 16 | அ | ஒரே சிற்றினத்தைச் சார்ந்த உயிரினங்களுக்கி டையே ஆன பண்புகளில் காணப்படும் மாறுபாடுகள் வேறுபாடுகள் எனப்படும். | 1 |
| | ஆ | 1.உடல்செல் வேறுபாடுகள்<br>2. இனச்செல் வேறுபாடுகள். | 1 |
| 17 | அ | கூற்று -சரி .காரணம் - சரி | 2 |
| 18 | | (see table below) | 2 |

| | |
|---|---|
| மருந்துகள் | மானோகுளோனல் எதிர்ப்புபொருள் |
| எரிபொருள் | இயற்கைவாயு |
| நுண்ணுயிரி | தடுப்புமருந்து |
| வளர்சிதைமாற்றம் | வைட்டமின்கள் |
| கரிம அமிலங்கள் | சிட்ரிக்அமிலம் |

| | | | |
|---|---|---|---|
| 19 | | நோயுற்றவரின் உடைமைப் பொருள்களான கைக்குட்டை,படுக்கை விரிப்பு, ஆடைகள்,பாத்திரங்கள், கழிப்பறைச் சாதனங்கள் ஆகியவை போமைட்டுகள் எனப்படும். | 2 |
| 20 | | (see table below) | |

| | நிறக்குருடு | மாலைக்கண் | |
|---|---|---|---|
| 1 | மரபியல்நோய் | வைட்டமின் A குறைபாட்டினால் தோன்றும் நோய் | 1 |
| 2 | பரம்பரையாக கடத்தப்படும். | பரம்பரையாக கடத்தப்படாது | 1 |

| | | | |
|---|---|---|---|
| 21 | | எடைக்குறைவு , கடும்பேதி, தொடர்ச்சியான காய்ச்சல்,கேண்டிடையாசிஸ்,ஹெர்பஸ்சூஸ் டர் என்னும் வைரஸ் தாக்கம் மற்றும் சந்தர்ப்பவாத நோய்கள் உருவாதல். | 2 |
| 22 | 1 | டைபாய்டு - சால்மோனல்லா டைபி | 1 |
| | 2 | அமீபிக் சீதபேதி - எண்டமீபா ஹிஸ்டலிடிகா | 1 |
| 23 | |  | 1<br>1 |
| 24 | 1 | நடுமூளையின் முதுகு பக்கத்தில் நான்கு அரைவட்டக் கோளங்கள் காணப்படுகின்றன. இவை கார்போரா குவாட்ரிஜெமினா என அழைக்கப்படுகின்றன. | 1 |
| | 2 | இவை பல்வேறு பார்த்தலின் அனிச்சைச் செயல்களையும் ,பார்வையின் சார்பு இயக்கத்தை கட்டுப்படுத்துதல் , ஒழுங்குபடுத்துதல் போன்ற செயல்களைச் செய்கின்றன. | 1 |
| 25 | 1 | ஆளுமை ஹார்மோன் - தைராக்ஸின் | 1 |
| | 2 | சண்டை , பறக்கும் மற்றும் பயமுறுத்தும் ஹார்மோன் - அட்ரீனலின்,நார் அட்ரீனலின் | 1 |
| 26 | | இரண்டு ஆண்கேமிட்டுகளில் ஒன்று அண்டத்துடனும் , மற்றொன்று இரண்டாம் நிலை உட்கருவுடன் இணைவது இரட்டைக் கருவுறுதல் எனப்படும். | 2 |
| 27 | | இருமய உட்கருவுடன் மற்றொரு ஆண்கேமிட் இணைவது மூவிணைவு எனப்படும். | 2 |
| 28 | | (see table below) | |

| | |
|---|---|
| ஆட்டோகோரி | பால்சம் |
| அனிமோகோரி | டிரைடாக்ஸ் |
| ஹைடிரோகோரி | தாமரை |
| சூகோரி | ஸாந்தியம் |

| | | | |
|---|---|---|---|
| 29 | | ஹென்றியின் விதிப்படி , அழுத்த அதிகரிப்பு நீர்மத்தில் வாயுக்களின் கரைதன்மையை அதிகரிக்கும். | 2 |
| 30 | | நிறை சதவீதம் = $\frac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைபொருளின் நிறை + கரைப்பானின் நிறை}} \times 100$<br>$\frac{10}{10+40} \times 100 = 20\ \%$ | 2 |
| 31 | ஈ | காரணம் கூற்றை விளக்கவில்லை | 2 |
| 32 | | அணுநிறை . C=12 , H=1 ,O=16 ,N=14<br>1) $C_6H_{12}O_6$ = ( 12 X 6)(1 X 12)(16X6)<br>= 72+12+96 = 180 கிராம் .<br>2. $HNO_3$ = (1X1)(14X1) (16X 3)<br>= 1+14+48 = 63 கிராம் . | 1<br>1 |
| 33 | அ | $12.046 \times 10^{23}$ அணுக்களைக் கொண்ட தாமிரம் மோல்களின் எண்ணிக்கை<br>= $\frac{\text{அணுக்களின் எண்ணிக்கை}}{\text{அவோகாட்ரா எண்}}$ $\frac{12.046 \times 10^{23}}{6.023 \times 10^{23}}$<br>= 2 மோல்கள். | 1 |
| | ஆ | 27.95கிராம் இரும்பு மோல்களின் எண்ணிக்கை = $\frac{\text{பொருளின் நிறை}}{\text{அணுநிறை}}$<br>= $\frac{27.95}{55.9}$ = 0.5 மோல் | 1 |
| 34 | | (see table below) | |

| | | |
|---|---|---|
| HCOOH | கரிம அமிலம் | 1 |
| வினிகர் | அமிலத்தன்மை | 1 |

| | | | |
|---|---|---|---|
| 35 | | (see table below) | |

| | | |
|---|---|---|
| தூளாக்கப்பட்ட மெக்னீசியத்தின் புறப்பரப்பு அதிகம் | வினை வேகமாக நடைபெறுகிறது. | 1 |
| காப்பர் சல்பேட் ஒரு வினையூக்கி | வினை வேகமாக நடைபெறுகிறது. | 1 |

| | | | |
|---|---|---|---|
| 36 | | (see table below) | 2 |

| | |
|---|---|
| சிறிய பரிமாணங்கள் | திருகு அளவி |
| பெரிய பரிமாணங்கள் | அளவுகோல் |
| அதிக தொலைவு | ஒளி ஆண்டு |
| சிறு தொலைவு | கிலோமீட்டர் |

| | | | |
|---|---|---|---|
| 37 | | தலைக்கோல் மற்றும் புரிக்கோல் | 2 |
| 38 | | விசையின் திருப்புத்திறன்<br>= விசை X செங்குத்துத் தொலைவு.<br>திருகுக் குறடுவின் கைப்பிடி நீளமாக இருக்கும்போது.விசையின் திருப்புத்திறன் அதிகமாகும், திருகுக் குறடைப்பயன்படுத்த எளிதாக இருக்கும். | 2 |

| எண் | | விடை | புள்ளி |
|---|---|---|---|
| | | | |
| 39 | | அண்டத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் , மற்றோரு பொருளை , அவற்றின் நிறைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்தகவிலும், அவற்றிற்கு இடையே உள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் அமைந்த விசையுடன் ஈர்க்கிறது | 2 |
| 40 | 1 | நியூட்டனின் மூன்றாவது இயக்கவிதி | 1 |
| | 2 | நேர்கோட்டு உந்த அழிவின்மை விதி. | 1 |
| 41 | | (கீழே உள்ள அட்டவணை) | 2 |

| | நிறை | எடை |
|---|---|---|
| 1 | அடிப்படை அளவு | வழி அளவு |
| 2 | பொருளில் உள்ளபருப் பொருளின் அளவு | பொருளில் உள்ள ஈர்ப்பியல் விசையின் அளவு |
| 3 | அலகு - கிலோகிராம் | அலகு -நியூட்டன் |
| 4 | இடத்திற்கு இடம் மாறாது | இடத்திற்கு இடம் மாறும். |
| 5 | இயற்பியல்தராசினால் அளக்கப்படுகிறது. | வில்தராசினால் அளக்கப்படுகிறது |

| எண் | | விடை | புள்ளி |
|---|---|---|---|
| 42 | | (கீழே உள்ள அட்டவணை) | 2 |

| | |
|---|---|
| மின்னழுத்தவேறுபாடு | வோல்ட் |
| மின்னோட்டம் | ஆம்பியர் |
| மின்னூட்டம் | கூலூம் |
| மின்தடை | ஓம் |

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 43 | காரீயம் , வெள்ளீயம் கலந்த கலவை | 1 |
| | குறைந்த உருகுநிலை உடையது | 1 |
| 44 | நிறை $m = 1$ கிலோகிராம் ,<br>ஒளியின் திசைவேகம் $c = 3 \times 10^{8} ms^{-1}$<br>ஆற்றல் $E=mc^2 = 1 \times (3\times10^{8})^2 = 9 \times10^{16}$ J | 2 |
| 45 | 1, உயரமான புகைப்போக்கிகள் அமைத்தல்<br>2.புகை வடிகட்டிகள் அமைத்தல்<br>3.அதிகளவில் மரங்கள் வளர்த்தல்<br>4.மக்கள்அதிகமில்லாத இடத்தில் பயன்படுத்துதல் | 2 |
| 46 | (கீழே) | 5 |

- பிளாஸ்மோடியத்தின் பால் இனப்பெருக்கம் பெண் அனாபிலஸ் கொசுவிலும், பாலிலா இனபெருக்கம் மனிதரிலும் நடக்கிறது.
- பாலிலா இனப்பெருக்கம் போது ஸ்போரோசவாய்டுகள் உருவாகிறது.
- இந்த ஸ்போரோசவாய்டுகள் கொசுவின் உமிழ் நீரில் வந்து சேருகிறது.
- பெண் அனாபிலஸ் கொசு மனிதனைக் கடிக்கும் போது ஸ்போரோசவாய்டுகள் மனித உடலில் நுழைகிறது.
- மனித உடலில் நுழைந்த ஸ்போரோசவாய்டுகள் முதலில் கல்லீரலில் பெருகி சிவப்பு அணுக்களை தாக்கி வெடிக்கச் செய்கிறது.
- இரத்த சிவப்பணுக்கள் வெடிக்கும் போது "ஹீமோசோயின்" என்ற நச்சுப் பொருள் வெளியே வந்து இரத்தத்தில் கலக்கிறது.
- இந்த நச்சுப் பொருள் கடுமையான காய்ச்சல் மற்றும் உடல் குளிர்ந்து நடுக்கத்தையும் உண்டாக்குகிறது.
- இதற்கு மலேரியா காய்ச்சல் என்று பெயர். இந்த காய்ச்சல் 3 முதல் 4 நாள்கள் வரை நீடிக்கும்.

**47** 2




1

**செல் உடலம்:** 1

- நரம்புகளின் செல் உடலம், ஒழுங்கற்ற வடிவம் அல்லது பன்முகச் சீர்மைவற்ற அமைப்பு ஆகும்.
- நரம்புசெல் (அ) நரம்பு செல்லின் உடலம் சைட்டான் எனவும் அழைக்கப் பெறும். 1
- செல் உடலத்தில் சைட்டோபிளாசம், நிசில் துகள்கள், செல் நுண்ணுறுப்புகள் போன்றவைகாணப்படுகிறது.
- நிசில் துகள் என்பவை புரதச் சேர்க்கைக்கான ரிபோசோம்களைக் கொண்டவை.

**டெண்டிரைட்டுகள்:**

- செல் உடலத்திலிருந்து வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும், அடுத்தடுத்துக் கிளைத்தலுக்குள்ளான குட்டை இழைகளே டெண்டிரைட்டுகள் அல்லதுடெண்டிரான் ஆகும்.
- டெண்டிரைட்டுகள்செல் உடலை நோக்கி மின்தூண்டல்களைக் கடத்துகின்றன.

**ஆக்ஸான்:**

- செல் உடலத்திலிருந்து உருவாகும் இழைகளில் ஒன்று மிக நீண்டு காணப்படும். முடிவில் இது கிளைத்துக் காணப்படும். இஃது ஆக்ஸான் என அழைக்கப்படும்.
- ஆக்ஸான்பின்முனைக் கிளைத்த, குமிழ் போன்ற அமைப்பில் முடிகின்றது. இவை நரம்புச் செல் இடைவெளிக் குமிழ்கள் என அழைக்கப்படும்.
- இவை நரம்புக் கடத்தும் பொருள் அல்லது நரம்பு சமிங்சைகளை கடத்தும் பொருள் என்ற வேதிப்பொருளால் நிரப்பப்பட்டுள்ளன.
- ஆக்ஸானிலுள்ள சைட்டோபிளாசத்திற்கு ஆக்ஸோபிளாசம் என்று பெயர்.
- ஆக்ஸானைச் சூழ்ந்துள்ள மையலின் என்ற உறையானது பலஅடுக்குகளைக் கொண்ட ஸ்வான் செல்களால் ஆனது. இதன் வெளி அடுக்கிற்கு நியூரிலெம்மா என்று பெயர்.
- ஆக்ஸானின் கிளைத்த முடிவுப் பகுதிகளைத் தவிர, மற்ற பகுதிகளை நியூரிலெம்மா போர்த்தியபடி உள்ளது. ஆக்ஸானின்மீது மையலின் உறையால் உண்டாக்கப்படும் இடைவெளிகள், 'ரேன்வியரின் கணுக்கள்' எனப்படும். நியூரிலெம்மா ரேன்வியர் கணுக்களில் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
- மின்தூண்டல் விரைவாகக் கடத்துவதை மையலின் உறை உறுதி செய்கிறது.

| | | |
|---|---|---|
| **48** | 1.இருவித்திலைத் தாவர விதையின் அமைப்பை விவரிக்க.<br><br><br>1) விதையானது தடித்த, சிறுநீரக வடிவம் கொண்டு மெலிதாக ஒருபுறம் வளைந்து காணப்படும்.<br>2) நீள்வட்டத்தில் அமைந்த வெண்மையான சற்று தடித்த ரபே என்ற அமைப்பு உள்ளது.<br>3) ரபேயின் ஒரு நுனியில் உள்ள சிறிய துளைக்கு வளர்துளை அல்லது மைக்ரோபைல் ஆகும்.<br>4) கரு,விதையுறையால் சூழப்பட்டுள்ளது. கருவில் ஒரு மைய அச்சு உள்ளது. இதனுடன் சதைப்பற்றுள்ள இருவிதையிலைகள் இணைந்துள்ளன.<br>5) மைய அச்சின் ஒரு முனையில் முளைவேரும், மற்றொரு முனையில் முளைக்குருத்தும் உள்ளன.<br>6) முளைவேரின் நுனி, வளர்துளையின் அருகில் அமைந்துள்ளது.<br>7) முளைக்குருத்து, இரண்டு வித்திலைகளுக்கு இடையில் உள்ளது.<br>8) முளைக்குருத்தில் சிறிய குட்டையான மையத்தண்டும், மிகச்சிறிய மொட்டும்,குவிந்த இரண்டு சிறிய இலைகளும் உள்ளன. | 1<br>1<br>1<br>1<br>1 |
| **49** | 4.கரியை எரிப்பதனால் ஏற்படும் தீமை பயக்கும் செயல்களைப் பட்டியலிடுக.<br>விடை :<br>➢ மாசு தூகள்கள் உருவாகின்றன.<br>➢ புவி வெப்பமாதலுக்கு காரணமாகின்றது.<br>➢ அதிகப்படியான வாயு வெளியேற்றப்படுகிறது.<br>➢ நிலத்தடி நீர் மற்றும் நீர்வள ஆதாரங்களைப் பாதிக்கின்றது.<br>➢ நீர் மற்றும் நிலம் மாசுபாடு அடையக் காரணமாகின்றது.<br>➢ நிலத்தடியில் உள்ள கந்தகத் தூகள்கள் அமிலமழை உருவாகக் காரணமாகின்றது.<br>➢ பாதரசம், யுரேனியம், தோரியம், ஆர்சனிக் மற்றும் கன உலோகங்கள் கலந்த கலவையில் இருந்து பெறப்படும் கழிவுப் பொருள்கள் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கின்றது. | 5 |
| **50** | ஒரே வெப்பநிலை ,ஒரே அழுத்தம் கொண்ட சம பருமனுள்ள வாயுக்கள், சம அளவு எண்ணிக்கை யுள்ள மூலக்கூறுகளைப் பெற்றிருக்கும். | 2 |
| | 1. வாயுக்களின் அணுக்கட்டு எண்ணைக் கணக்கிட<br>2.மூலக்கூறு வாய்பாட்டைக் கணக்கிட<br>3.மூலக்கூறு நிறைக்கும்,ஆவிஅடர்த்திக்கும் உள்ள தொடர்பை உருவாக்குகிறது.<br>4திட்டவெப்ப அழுத்தநிலையில் வாயுவின் மோலார் பருமனைக் கணக்கிட<br>5. கேலுசாக்கின் விதியை விளக்குகிறது. | 3 |

| | | | |
|---|---|---|---|
| **51** | 1 | ஆக்ஸிஜனேற்றமும் , ஒடுக்கமும் ஒரே சமயத்தில் நிகழக்கூடிய வினையை ஆக்ஸிஜனேற்ற-ஒடுக்கவினை என்கிறோம்.<br>$Zn(S) + CuSO_{4(aq)} \longrightarrow ZnSO_4\ (aq) + Cu(s)$ | 1<br>1 |
| | 2 | 1) ஆக்ஸிஜன் ஒடுக்கி – காப்பர்<br>2) ஆக்ஸிஜனேற்றி – துத்தநாகம் | 1 |
| | 3 | $Zn^0 \longrightarrow Zn^{2+} + 2e^-$<br>$Cu^{2+} + 2e^- \longrightarrow Cu^0$ | 1 |
| | 4 | ஆக்ஸிஜனேற்றம் - $Zn \longrightarrow Zn^{2+} + 2e^-$<br>ஒடுக்கம் - $Cu^{2+} + 2e^- \longrightarrow Cu$<br>ஆக்ஸிஜனேற்ற ஒடுக்கவினை –<br>$CuSO_4 \longrightarrow Cu^{2+} + SO_4^{2-}$ | 1 |
| **52** | 1 | மிகக் குறைந்த மறுசுழற்சி வீதம் | 3 |
| | 2 | அதிகக் கதிர்வீச்சு | |
| | 3 | குறைந்த ஈர்ப்பு விசை ஆகியவை விண்வெளியில் மனித உடலில் தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. | |
| | 4 | இவை விண்வெளி நிலையங்களில் தங்கும் காலத்தைக் குறைக்கின்றன. | |
| | 5 | இவை அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும் நெடுநாள் உடல்நலப்பாதிப்பை தருவதாகவும் உள்ளன.<br>எனவே விண்வெளி நிலையங்கள் நீண்டநாள் தங்குவதால் ஏற்படும் விளைவுகளைஆராயப் பயன்படுத்தப் படுகின்றன என்பது உறுதி. | |
| | ஆ | அண்டத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் , மற்றோரு பொருளை , அவற்றின் நிறைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்தகவிலும், அவற்றிற்கு இடையே உள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் அமைந்த விசையுடன் ஈர்க்கிறது மேலும் விசையானது இருபொருள்களின் மையங்களை இணைக்கும்கோட்டின் வழியே செயல்படும். | 2 |
| **53** | அ | $P = 2160\ W;\ I = 9A;\ V = ?$<br>$P = V \times I$<br>$V = P/I = 2160 / 9 = 240\ V$<br>குளிர்விப்பான் செயல்படும்போது மின்னழுத்த வீழ்ச்சி ,$V = 240\ V$ | 2 |
| | ஆ | வழக்கமான வீட்டு மின்னழுத்தம் = 220 V என்பதால் ,மேற்கண்ட மின்னழுத்தம் 20 V அதிகமாக உள்ளது. | 2 |
| | இ | குளிர்விப்பான் மின்தடை மாறாது இருக்கும் எனவே $V = 120\ V$ எனில் $I = V/R$ மின்னோட்டமும் குறைகிறது.<br>$I = 4.5\ A$<br>எனவே குளிர்விப்பான் செயல்படாது. | 1 |


**இ.சின்னப்பராஜ்,** M.Sc.,M.Phil.,B.Ed.,

**பட்டதாரி ஆசிரியர் – அறிவியல்**

**தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி**

**தேவகோட்டை – 630303.**